# முதல்வர் மு.க.ஸ்டாலின் வேலூர் மாவட்டம் - மேல்மொணவூர் விழாவில் நேற்று இலங்கைத் தமிழர்களுக்கு புதிய இல்லங்களைத் திறந்துவைத்து சிறார்களுடன் உரையாடிய காட்சி!









முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.9.2023) பொது மற்றும் மறுவாழ்வுத்துறை சார்பில் வேலூர் மாவட்டம், மேல்மொணவூர், இலங்கை தமிழர்கள் மறுவாழ்வு முகாமிற்கு நேரடியாக சென்று வீடுகளை திறந்து வைத்து, வீடுகளை பார்வையிட்டு பயனாளிகளிடம் விசாரித்தார். இந்நிகழ்வின் போது நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஜெகத்ரட்சகன், து.மு.கதிர் ஆனந்த், கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.பி.நந்தகுமார், பா.கார்த்திகேயன், திருமதி அமலு விஜயன், திருமதி ஆ. தமிழரசி, வேலூர் மாநகராட்சி மேயர் திருமதி சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் சுனில்குமார், பொது மற்றும் மறுவாழ்வுத்துறை செயலாளர் க.நந்தகுமார், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வு துறை ஆணையர் திருமதி ஜெசிந்தா லாஸரஸ், வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பெ.குமாரவேல் பாண்டியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.







### வெள்ளத் தடுப்பு நடவடிக்கை - வடகிழக்குப் பருவமழையை எதிர்கொள்ள

## சென்னை - புறநகர்ப் பகுதிகளில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகள்!

### தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது !

சென்னை, செப்.18-

அரசு தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா தலைமையில் நேற்று வெள்ளத் தடுப்பு நடவடிக்கை மற்றும் வடகிழக்குப் பருவமழையை எதிர்கொள்ள சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் மழைநீர் வடிகால் வாய் அமைக்கும் பணிகள் தொடர்பாக ஆய்வுக் கூட்டம் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பல் வேறு துறைகள் மூலம் நடைபெற்று வரும் மழை நீர் வடிகால் அமைக்கும் பணிகள் மற்றும் வெள்ளத் தடுப்பு நடவடிக்கை குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

தலைமைச் செயலாளர், பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகள் குறித்து ஆய்வு செய்தார்கள்.

மண்டலம்4ல் வடக்கு அவென்யூ சாலையில் மேற்கொள்ளப்பட்டுவரும் மழைநீர் வடிகால் பணியினை விரைந்து முடிக்க வேண்டும் என்றும், அம்பேத்கர் நீர்வழிக்கால்வாயை ஆழப்படுத்தி தூர்வாரும் பணியினை செப்டம்பர் மாதம் இறுதிக்குள் முடிக்க அறிவுறுத்தினார்கள்.

மண்டலம்5ல் தமிழ்ச் சாலை, இராஜாஜி சாலை மற்றும் எழும்பூர் பிரதான சாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணியினை 30.9.2023க்குள் முடிக்கவும் அறிவுறுத்தினார்கள்.

மண்டலம்6ல் பராக்கா சாலையில் தற்போது மந்த நிலையில் பணி நடைபெறுவதால் ஒப்பந்ததாரர் மீது நடவடிக்கை எடுக்கும்படி அறிவுறுத்தினார்கள்.

ஸ்டீபன்சன் சாலையில் மேற்கொள்ளப்பட்டுவரும் மழைநீர் வடிகால் பணி, *Sump Work and Pumping arrangements, Sluice Gate* அமைக்கும் பணிகளை 30.09.2023க்குள் முடிக்க அறிவுறுத்தினார்கள்.

மண்டலம்7ல் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணிகள் அனைத்தையும் *Silt Catch Pit* அமைக்கும் பணியினையும் 30.09.2023க்குள் முடிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள்.

மண்டலம்8ல் பார்த்தசாரதி சாலையில் மந்த நிலையில் பணி நடைபெறுவதால் ஒப்பந்ததாரர் மீது நடவடிக்கை எடுக்கும்படி அறிவுறுத்தினார்கள்.

மண்டலம்9ல் அனைத்து மழைநீர் வடிகால் பணிகளை 30.09.2023க்குள்முடிக்க அறிவுறுத்தினார்கள்.

மண்டலம்10ல் அசோக் நகர் நான்காவது அவென்யூ சாலையில் மேற்கொள்ளப்பட்டுவரும் மழைநீர் வடிகால் பணியினை விரைந்து முடிக்க வேண்டும் என்றும், புஷ்பவதி அம்மாள் நீர்வழிக்கால்வாயில் தூர்வாரி மழைநீர் விரைந்து செல்ல வழிவகை செய்யுமாறும் பணிகளை செப்டம்பர் மாதம் இறுதிக்குள் முடிக்கும்படி அறிவுறுத்தினார்கள்.

மண்டலம்11ல் மாதா கோவில் தெருவில் மேற்கொள்ளப்பட்டுவரும் மழைநீர் வடிகால் பணியினை விரைந்து முடிக்குமாறு அறிவுறுத்தினார்கள்.

மண்டலம் 12ல் திருவள்ளுவர் நகர் ஆறுமுகம் தெருவில் மழைநீர் வடிகால் பணி மந்த நிலையில் நடைபெறுவதால் ஒப்பந்ததாரருக்கு தாக்கீது வழங்கி மேல் நடவடிக்கை எடுக்கும்படியும் அறிவுறுத்தினார்கள்.

மண்டலம்13ல் தலைமைச் செயலக காலணியில் மழைநீர் வடிகால் பணியினை விரைந்து முடிக்குமாறு அறிவுறுத்தினார்கள்.

மாம்பலம் நீர்வழிக் கால்வாயில் ஒட்டியிருக்கும் அம்மா உணவகம் மற்றும் 16வது நாள் காரியக்கூட கட்டடத்தை வேறு இடத்தில் மாற்றியும் மற்றும் இங்குள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றியும் மாம்பலம் நீர்வழிக்கால் வாயினை அகலப்படுத்துமாறு அறிவுறுத்தினார்கள்.

நவீன இயந்திரங்கள் கொண்டு நீர்வழிக்கால் வாயிகளில் தூரிவாரிய மண் மற்றும் கட்டடக் கழிவுகள் உடனுக்குடன் அப்புறப்படுத்தவும் மழைநீர் விரைந்து செல்லும் வகையில் பணி மேற்கொள்ள அறிவுறுத்தினார்கள்.

வட்டார துணை ஆணையர் (தெற்கு) கிழக்கு கடற்கரை சாலையில் திருவான்மியூர் முதல் ஈஞ்சம்பாக்கம் வரை மழைநீர் தேங்காவண்ணம் இருக்க குறுக்குச் சாலைகளில் கோவலம் வடிநில பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணி *B'canal*லில் வடியும் வகையில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று தெரிவித்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து வடிகால் பணிகளையும் 30.09.2023க்குள் முடிக்க அறிவுறுத்தினார்கள்.

கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்கள் வரும் பருவ மழையினை எதிர்கொள்ள அனைத்து நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது என்றும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திடம் வடபழனி மற்றும் *OMR* சாலைகளில் மழைநீர் தேங்காவண்ணம் நடவடிக்கை எடுக்கும்படியும் அறிவுறுத்தினார்கள்.

கூடுதல் தலைமைச் செயலாளர், நீர்வள ஆதார துறை அவர்கள் நீர்வள ஆதார துறையினால் பருவ மழை முன்னெச்சரிக்கை ஆயத்தப்பணிகளில் அனை ஏரியிலிருந்து மழைநீர் வெளியேற பல்லாவரம் சுற்றுவட்டாரச்சாலை, *DLF* பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணி அனைத்தும் 90% முடிந்துள்ளது என்றும் மீதமுள்ள பணிகள் 30.9.2023க்குள் முடிக்கப்படும் என்று தெரிவித்தார்கள். தணிகாச்சலம் நீர்வழிக் கால்வாயில் மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகளை வட்டார துணை ஆணையர் (வடக்கு), பெருநகர சென்னை மாநகராட்சி, நெடுஞ்சாலைத்துறை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், போக்குவரத்து காவல் துறை ஆகியோர் ஒருங்கிணைந்து கூட்டு ஆய்வு செய்து பாதிக்கப்பட்ட இடங்களைக் கண்டறிந்து அவ்விடங்களில் பணிகளை விரைந்து முடிக்குமாறு தலைமைச் செயலாளர் அறிவுறுத்தினார்.

மாதவரம் டேங்க் மிகவும் பாதிக்கப்பட்ட இடங்களில் செப்டம்பர் மாதம் இறுதிக்குள் முடிக்கப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

போரூர் உபரிநீர் செல்லும் கால்வாயினை வட்டார துணை ஆணையர் (தெற்கு), பெருநகர சென்னை மாநகராட்சி, நெடுஞ்சாலைத்துறை, நீர்வள ஆதாரத்துறை, மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம் ஆகியோர் கூட்டு ஆய்வு செய்து பாதிக்கப்படும் இடங்களைக் கண்டறிந்து மழைநீர் செல்ல *Earthen drain* அமைக்க நடவடிக்கை எடுக்கும்படியும், ஏழு இடங்களில் *regulator* அமைக்கும் பணியினையும் விரைந்து முடிக்குமாறும் தலைமைச் செயலாளர் அறிவுறுத்தினார்.



தந்தை பெரியாரின் 145 வது பிறந்த தினத்தையொட்டி சேலத்தில்இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தந்தை பெரியாரின் முழு உருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, சமத்துவ நாள் உறுதி மொழி எடுத்துக் கொண்டார். உடன்..வீட்டுவசதி மற்றும் மதுவிலக்கு. ஆயத தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி, சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர். எஸ். கார்மேகம் சேலம் மாவட்ட கழக செயலாளர்கள். இரா. இராஜேந்திரன் எம். எல்.ஏ.(சேலம் மத்திய மாவட்டம்) எஸ். ஆர். சிவலிங்கம் (சேலம் கிழக்கு மாவட்டம்) டி.எம். செல்வகணபதி ( சேலம் மேற்கு மாவட்டம்) மாநில தகவல் தொழில் நுட்ப அணி துணை செயலாளர். ஆ.க. தருண் உட்பட மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர். பகுதி, கோட்ட கழக நிர்வாகிகள். அணைத்து அணிகளின் நிர்வாகிகள். உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள். இருந்தனர்.